




# உடன்படிக்கையும் அதன் வரைபடமும்

பாடம் 10 செப்டம்பர் 6, 2025



"மோசே வந்து, கர்த்தருடைய வார்த்தைகள் யாவையும் நியாயங்கள் யாவையும் ஜனங்களுக்கு அறிவித்தான்; அப்பொழுது ஜனங்கள் எல்லாரும் ஏகசத்தமாய்: கர்த்தர் அருளின எல்லா வார்த்தைகளின்படியும் செய்வோம் என்று பிரதியுத்தரம் சொன்னார்கள்." யாத்திராகமம் 24:3

பத்து கட்டளைகளை சத்தமாக அறிவித்து, மோசேக்கு அடிப்படை சட்டங்களை கொடுத்த பிறகு, தேவன் இஸ்ரவேலுடன் உடன்படிக்கை செய்ய விரும்பினார்.

அந்த உடன்படிக்கை எளிமையானது: நான் உங்கள் தேவனாக இருப்பேன், நான் உங்களை பாதுகாத்து, உங்களை ஆசீர்வதிப்பேன்; நீங்கள் என் கட்டளைகளுக்கு கீழ்படியுங்கள்.

உடன்படிக்கையை ஒரு சுருளில் எழுதிய பிறகு, இரு தரப்பினரும் அதை உறுதிப்படுத்த வேண்டியிருந்தது. ஜனங்கள் அதைக் கடைப்பிடிப்பதாக உறுதிப்படுத்தினர். தேவன் எவ்வாறு உறுதிப்படுத்தினார்? இரத்தத்தால்; ஒரு விருந்து மூலம்; மற்றும் உடன்படிக்கையை புரிந்துகொள்ள உதவும் ஒரு மாதிரியுடன்.





**உடன்படிக்கை:**

- உடன்படிக்கையின் இரத்தம் (யாத் 24:1-6, 8)
- உடன்படிக்கையின் நிறைவேறுதல் (யாத் 24:7)
- உடன்படிக்கையின் விருந்து (யாத் 24:9-18)

**மாதிரி:**


- மாதிரியின் நோக்கம் (யாத் 25:1-9)
- மாதிரியின் ஆயத்தம் (யாத் 31:1-18)





# உடன்படிக்கை

# உடன்படிக்கையின் இரத்தம்

"அப்பொழுது மோசே இரத்தத்தை எடுத்து, ஜனங்களின்மேல் தெளித்து, இந்த வார்த்தைகள் யாவையுங்குறித்து கர்த்தர் உங்களோடே பண்ணின உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்றான்." (யாத்திராகமம் 24:8)





இந்த உடன்படிக்கை எவ்வாறு ஏற்படுத்தப்பட்டது?

1. உடன்படிக்கை வாசிக்கப்பட்டது (யாத். 24:3மு)
2. ஜனங்கள் சாதகமாக பதிலளித்தனர் (யாத். 24:3பி)
3. அது சுருளில் எழுதப்படடது (யாத். 24:4மு)
4. பலிபீடம் கட்டப்பட்டது (யாத். 24:4பி)
5. 12 தூண்கள் அமைக்கப்பட்டன (யாத். 24:4ந)
6. தகன பலிகள் பலியிடப்பட்டது (யாத். 24:5)
7. இரத்தத்தில் பாதி பலிபீடத்தில் தெளிக்கப்பட்டது (யாத். 24:6)
8. உடன்படிக்கை மீண்டும் வாசிக்கப்பட்டது (யாத். 24:7மு)
9. ஜனங்கள் மீண்டும் சாதகமாக பதிலளித்தனர் (யாத். 24:7பி)
10. மற்றொரு பாதி இரத்தம் ஜனங்கள் மீது தெளிக்கப்பட்டது (யாத். 24:8மு)
11. அதை மோசே "உடன்படிக்கையின் இரத்தமாக" அறிவித்தார் (யாத். 24:8பி; மத். 26:28)
12. உடன்படிக்கையை உறுதிப்படுத்த ஒரு விருந்து நடைபெற்றது (யாத். 24:9-11)




தேவன் இஸ்ரவேலை தம்முடைய ஜனமாக அங்கிகரித்தார்(12 நெடுவரிசைகள்): அவர் குறிப்பாக இளைஞர்களை மதிப்பிட்டார்: மேலும் அவர் ஒவ்வொரு நபருக்கும் தனித்தனியாக தன்னை ஒப்புக்கொடுத்தார்(அவர்கள் மீது தம்முடைய இரத்தத்தை தெளித்தார்.

தேவன் நம்முடன் தனிப்பட்ட விதத்திலும், விசுவாசிகளின் சமூகமாகவும் ஒரு உறவை வைத்துக்கொள்ள விரும்புகிறார்.

# உடன்படிக்கையின் நிறைவேறுதல்


"உடன்படிக்கையின் புஸ்தகத்தை எடுத்து, ஜனங்களின் காது கேட்க வாசித்தான்; அவர்கள் கர்த்தர் சொன்னபடியெல்லாம் செய்து, கீழ்ப்படிந்து நடப்போம் என்றார்கள்." (யாத்திராகமம் 24:7)



முழு நேர்மையுடன், ஜனங்கள் உடன்படிக்கையை கடைபிடிக்க தங்களை அர்ப்பணித்து கொண்டனர். இந்த உறுதிமொழி குறகிய காலமே நீடித்தது (யாத் . 32:8).

அடுத்த தலைமுறையும் உடன்படிக்கையை கடைபிடிக்க உறுதிபூண்டது (யோசு. 24:18பி). ஆனால் யோசுவா தெளிவாக எச்சரித்தார்: "நீங்கள் கர்த்தரைச் சேவிக்கமாட்டீர்கள்;" (யோசு. 24:19).

நமக்கு நல்ல நோக்கங்கள் இருந்தபோதிலும், தேவனுக்கு கீழ்படிவதை தடுப்பது எது?



இயற்கையாகவே, நாம் கீழ்படியாமை உள்ளவர்கள் (ரோ. 7:18), மேலும் நமது போக்கை மாற்றிக் கொள்ள நாம் எதுவும் செய்ய முடியாது (ரோ. 7:24).






ஆனால் அவரை நாம் அனுமதிப்போமானால், தேவனால் தான் நம் இயற்தன்மையை மாற்ற முடியும் (எசே. 36:26-27). நாம் அவருக்கு கீழ்படியும்படி, அவர் சுத்திகரிக்கிறார், எடுத்துக்கொள்கிறார், அமைத்து கொடுக்கிறார். அவர் மட்டுமே நம்மை பலப்படுத்துகிறார் (2 கொரி. 12:10).

# உடன்படிக்கையின் விருந்து

"பின்பு மோசேயும் ஆரோனும் நாதாபும் அபியூவும், இஸ்ரவேலருடைய மூப்பரில் எழுபதுபேரும் ஏறிப்போய்,; [...] அவர்கள் தேவனைத் தரிசித்து, பின்பு புசித்துக் குடித்தார்கள்." (யாத்திராகமம் 24:9, 11பி)



யாக்கோபு மற்றும் லாபான் உதாரணத்தில் நாம் காணக்கூடியது போல, பண்டைய கிழக்கில் ஒரு உடன்படிக்கையின் உறுதிமொழியில் இரு தரப்பினரும் பகிர்ந்து கொள்ளும் உணவும் அடங்கும் (ஆதி. 31:44-54).



சீனாயில், 74 பேருக்கு தேவன் உடன்படிக்கையின் விருந்து அளித்தார்: மோசே, ஆரோன், நாதாப், அபியு, மற்றும் 70 மூப்பர்கள், எல்லா ஜனங்களையும் இவர்கள் பிரதிபலித்தார்கள் (யாத். 24:9-11).

இயேசு புதிய உடன்படிக்கையை ஸ்தாபித்த போது, 12 அப்போஸ்தலர்களுடன் தம்முடைய உணவை பகிர்ந்து கொள்வதன் மூலமும் அதை செய்தார் (மத். 26:26-28).


இரட்சிப்பை அவர்கள் இறுதியாக நிராகரித்த போதிலும், நாதாப், அபியூ, யூதாஸ் இவர்கள் இந்த "உடன்படிக்கை விருந்தில்" இருந்து விலக்கப்படவில்லை.

நாம் கர்த்தருடைய இராபோஜனத்தில் பங்குகொள்ளும் ஒவ்வொரு முறையும், தேவனுடனான நமது உடன்படிக்கையை புதுப்பிக்கிறோம். அப்பத்தையும் திராட்சரசத்தையும் உட்கொள்வதன் மூலம், இயேசுவில் நமக்கு கிடைத்த மன்னிப்பையும் இரட்சிப்பையும் கொண்டாடுகிறோம் (1 கொரி. 11:26).





# மாதிரி



# மாதிரியின் நோக்கம்

“அவர்கள் நடுவிலே நான் வாசம்பண்ண, எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக.”
(யாத்திராகமம் 25:8)

உடன்படிக்கையின் தனது பங்கை அவர் நிறைவேற்றுவார் என்பதற்கான உத்தரவாதமாக, தேவன் மக்களிடையே சென்று வாழ முடிவு செய்தார்.



ஆனால் தேவனுடைய சரீர பிரசன்னம் அவர்கள் அனைவருக்கும் உடனடி மரணத்தை குறிக்கும் (யாத். 33:20). ஆகையால், அவர் தம்முடைய பிரசன்னத்தை வெளிப்படுத்தக்கூடிய ஒரு வாசஸ்தலத்தை கட்டும்படி அவர்களுக்கு கட்டளையிட்டார். இந்த பிரசன்னம் சின்னங்களில் வெளிப்பட்டது. ஏனென்றால் தேவன் எந்த பூமிக்குரிய கோவிலிலும் உடல் ரீதியாக வசிப்பதில்லை (அப் 17:24 ).





மோசேக்கு மாதிரி காட்டப்பட்டு, அதன் கட்டுமானத்திற்கான குறிப்பிட்ட வழிமுறைகள் வழங்கப்பட்டன. தேவைனயான பொருட்களை பங்களிக்குமாறு மக்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது(யாத். 25:2-7).

இந்த ஆசரிப்புக் கூடாரமும், சாலமோன் கட்டிய ஆலயமும் பரலோகத்தில் கட்டப்பட்ட ஆலயத்தின் மாதிரியாக இருந்தன (எபி. 8:1-2; 1இரா. 8:27, 30).

இயேசு மரித்த போது திரைச்சீலை கிழிக்கப்பட்ட நாள் வரையிலும், ஒரு இஸ்ரவேலர் பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைந்த போது, அவர்—அடையாளப்பூர்வமாக—தேவனுடைய பிரசன்னத்திற்குள் நுழைகிறார்....



# மாதிரியின் ஆயத்தம்

"நான் யூதாவின் கோத்திரத்தில் ஊருடைய மகனான ஊரியின் குமாரன் பெசலெயேலைப் பேர்சொல்லி அழைத்து, விநோதமான வேலைகளை அவன் யோசித்துச் செய்கிறதற்கும், பொன்னிலும் வெள்ளியிலும் வெண்கலத்திலும் வேலைசெய்கிறதற்கும்." (யாத்திராகமம் 31:2-3)







தேவன் கட்டுமானம் குறித்து மோசேக்கு மிக விரிவான வழிமுறைகளை கொடுத்த போதிலும், அவர் எல்லா விவரங்களையும் சொல்லவில்லை. வெண்கல தொட்டி, கேருபீன்கள், ஆசாரியர்களின் பாகைகள் போன்றவை எப்படி இருக்க வேண்டும்? இது பரிசுத்த ஆவியானருக்கு கட்டிட கலைஞர்களின் பரிசுகளுடன் வேலை செய்ய வாய்ப்பளித்தது.

இந்த விவரங்களுக்கு, பரிசுத்த ஆவியானவர் சிறப்பு வரங்களை வழங்கினார்:

- பெசலெயேல், முழு திட்டத்தையும் இயக்கியவர் (யாத். 31:2)
- அகோலியாப், அவருடைய தலைமை உதவியாளர் (யாத். 31:6மு)
- வேலையில் உதவிய மற்றவர்கள் (யாத். 31:6பி)



வாசஸ்தலத்தை கட்டுவதற்கான வழிமுறைகளுக்கு மத்தியில், ஓய்வுநாளை பற்றிய சிறப்பு குறிப்பு உள்ளது (யாத். 31:12-17). இதற்கும் ஓய்வுநாளுக்கும் என்ன சம்மந்தம்?

பரிசுத்தமே முக்கியம். பரிசுத்த தேவனை அணுக, நாமும் அவரைப் போலவே பரிசுத்தமாக இருக்க வேண்டும். ஓய்வுநாள் என்பது பரிசுத்தத்தின் அடையாளம் (யாத். 31:13; எசே. 20:12, 20).